**O.S. No.54/2020**

**16.02.2026**

**வா.சா.1**

**திரு செல்லபாண்டியன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை (1, 5 ம் பிரதிவாதிகள் தரப்பில்)**

9 ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணை அடாப்ட் செய்யப்படுகிறது. மேலும், என்னுடைய பிராதில் என்ன வேலை செய்கிறேன் என குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் நிலம் வாங்கி விற்கும் தொழில், Browsing Centre மற்றும் பொது சேவை செய்து வருவதாகவும் சொல்லியுள்ளேன். பொது சேவை செய்வதற்கான ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். பொது சேவை என்பது எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமல் செய்வது என்றால் இல்லை. Commission Agent க்குரிய உரிம ஆவணம் எதுவும் வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என்னிடம் Agent Licence எதுவும் கிடையாது. நான் Licence டன் உரிய ஆவணம் எதுவும் என்னுடைய பிராதில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. நான் Browsing Centre

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.16 17:25:30 +0530

வைத்திருப்பதற்கும் கணினி வைத்திருப்பதற்குமான ஆவணங்கள் எதையும் என்னுடைய பிராதில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி, என்னிடம் உள்ளது. பிராதில் குறிப்பாக பாரா எண் 8 ல் விபர பட்டியலில் எனக்கு கொடுக்கப்பட வேண்டியவர்களின் பெயர்கள், அவர்களது தந்தையின் பெயர்கள், முழு முகவரிகள், நிலத்தை எடுக்க கூடிய புல எண்கள், நிலத்தின் மதிப்பீடு ஆகிய விபரங்கள் உள்ளனவா என்றால் இருக்கின்றன என்று சாட்சி கூறிவிட்டு தற்சமயம் சாட்சி மாற்றி பெயர் மட்டும் உள்ளது என கூறுகிறார். 1, 5 பிரதிவாதிகள் குறிப்பிட்டு என்னை அணுகி எங்களுக்கு ONGC லிருந்து நிலம் எடுத்ததற்கு 2½ % என தனித்தனியாக பத்திரம் ஏதும் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு பெற்ற ஆவணங்கள் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரி. 1ம் பிரதிவாதி வாங்கிய தொகை ரூ.1,06,01,000/- 5 ம் பிரதிவாதி வாங்கிய தொகை ரூ.1,08,89,000/- ஆகும். மேற்படி தொகைகள் ONGC நிறுவனத்திலிருந்து நில உரிமைதாரர்களுக்கு கொடுக்கப்பட்டது. 1, 5 பிரதிவாதிகள் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்களா என்றால் அனுப்பினார்கள். ONGC மூலமாக நில உரிமைதாரர்களுக்கு மட்டுமே நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டது என்றால் சரி. ONGC க்கும் எனக்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றால் சரி. பிராதில் பத்தி 6 ல் மகேஷ் மற்றும் செல்வராஜ் கூட்டு சதியாகும் என

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.16 17:25:36 +0530

தெரிவித்துள்ளேன். இதை காட்டுவதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. 1 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு ONGC லிருந்து கிடைக்கப்பெற்ற தொகை குறித்த விபரம் எனக்கு எவ்வாறு தெரியுமென்றால் சமாதான கூட்டத்தில் 13.03.2018 அன்று வருவாய் கோட்டாட்சியர் பேசியபோது தெரியவந்தது. 25.03.2018 ல் கிரயம் செய்து கொடுப்பதாக கூறியிருந்ததில் நான் கையொப்பம் செய்துள்ளேன். நிலத்தை எடுப்பதற்கு நான் நிலத்தின் உரிமைதாரர் இல்லையென்றால் சரி. நான் கையெழுத்து செய்த வருவாய் துறை ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேட்டுப்பாளையம் கண்ணன் என்பவர் வீட்டில் கலந்தாய்வு கூட்டம் போட்டார்கள். மேற்படி கண்ணன் நில உரிமைதாரர்களில் ஒருவர். மேட்டுப்பாளையத்தை சேர்ந்த கண்ணன் கமிஷன் கொடுத்தார். நான் பத்தி 8 ல் கண்ணன் என்று மட்டும் தெரிவித்துள்ளபடியால் அவர்தான் மேட்டுப்பாளையத்தை சேர்ந்த கண்ணன் என்பது குறித்து தெரிந்து கொள்ள இயலாது என்றால் தவறு. கண்ணன் வீட்டில் கலந்தாய்வு கூட்டம் நடைபெறவில்லை என்றால் தவறு. என் பெயரில் நிலங்கள் எதுவும் கிடையாது. வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12, வா.சா.ஆ.19, வா.சா.ஆ.20 க்கும் எனக்கும் எந்த விதத்திலும் சம்மந்தம் கிடையாது என்றால் அது என்னவென்று எனக்கு தெரியவில்லை. பிறகு சாட்சி மாற்றி இன்னார் பெயரில் சொத்து உள்ளது என்பதை காட்டுவதற்காக தாக்கல்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.16 17:25:40 +0530

செய்துள்ளேன் என கூறுகிறார். முனுசாமி மற்றும் மகேஷ் ஆகியோரின் அசல் ஆவண சொத்துக்கள் குறித்து சார் பதிவாளர் அலுவலக நகல் பதிவிறக்கம் செய்யவில்லை என்றால் சார் பதிவாளர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துதான் நான் வில்லங்க சான்றின் நகல் பெற்றுள்ளேன். அவற்றுக்குண்டான ரசீது என்னிடம் உள்ளது. என்னை நான் அடையாளம் காட்டக்கூடிய புகைப்படத்துடன் கூடிய ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, பான் கார்ட், ரேஷன் கார்ட் மற்றும் அரசால் அங்கீகரிக்ககூடிய ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1, 5 பிரதிவாதிகள் மீது காவல் துறையில் புகார் எதுவும் கொடுத்துள்ளேனா அதற்கான புகார் ரசீது மனு பிராதில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1, 5 பிரதிவாதிகள் எனக்கு பணம் கொடுக்க வேண்டியிருந்தால் நான் காவல் துறையை நாடியிருப்பேன் எனவும் அவர்கள் எனக்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை என்பதால் பொய்யான புகார் தாக்கல் செய்துள்ளேன் எனவும் சொன்னால் தவறு. வா.சா.ஆ.32 க்கான புகைப்படங்கள் அனைத்தும் நானேதான் எடுத்தேன். என்னுடையே கைபேசியை வேறு ஒருவரிடம் கொடுத்த எடுக்கப்பட்டது. அந்த வேறு ஒரு நபரின் பெயர் என்னவென்றால் மேட்டுப்பாளையம் கண்ணனின் மகள் ரேவதி ஆவார். ஒரு கணினி புகைப்படத்தின் மூலம் எடுக்கப்படும்போது இல்லாத ஒருவரை சேர்க்க முடியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதுபோல் நான்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.16 17:25:45 +0530

செய்யவில்லை. Electronic Evidence Act பிரகாரம் எதன் மூலம் புகைப்படும் எடுக்கப்பட்டதோ அந்த கருவியையும் தாக்கல் செய்திருக்க வேண்டும் எனவும் நான் கைபேசியில் புகைப்படம் எடுத்திருந்தால் அந்த கைபேசியையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் தாக்கல் செய்யவில்லை. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள புகைப்படங்கள் மற்றும் Pen-drive, CD ஆகியன Electronic Evidence Act BNS பிரகாரம் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சமாதான உடன்படிக்கைதான் இந்த வழக்கின் முக்கியமான ஆவணம் என்றால் சரி. பிராதில் 1ம் ஆவணமாக காட்டப்பட்டுள்ள 27.11.2015 தேதியிட்ட ஆவணம் நானே தயார் செய்த ஆவணம் என்றால் சரி. பிராதில் 1ம் ஆவணமாக காட்டப்பட்டுள்ள ஆவணத்தில் மாதம் எதுவும் குறிப்பிடாததற்கு காரணம் நானே தயார் செய்ததுதான் என்றால் இல்லை. நானே தயார் செய்ததால்தான் அதை ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. முறையாக பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் முறையான முத்திரை தாள் ஒட்டப்பட்டிருக்க வேண்டுமென்றால் நான் பெனாலிடி கட்டி விட்டேன். 1, 5 பிரதிவாதிகள் எனக்கு எந்த விதத்திலும் கமிஷன் தொகை கொடுக்க கடமைபட்டவர்கள் அல்ல என்றால் தவறு. சம்மந்தப்பட்ட நபர்களுக்கு கிடைக்கப்பெற்ற தொகையை அங்கு பணிபுரியும் யாரோ ஒரு நபரிடமிருந்து பெற்று பிரதிவாதிகளை மிரட்டி பணம் பறிப்பதற்காக இந்த வழக்கு தாக்கல்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.16 17:25:49 +0530

செய்துள்ளேன் என்றால் தவறு. பெத்தையன் என்பவர் இந்த வழக்கில் பிரதிவாதி இல்லை. குஞ்சிதபாதம் மகன் பெத்தையனிடமிருந்து எனக்கு கமிஷன் தொகை வந்து விட்டது. 1, 5 பிரதிவாதிகளை மிரட்டி பணம் வாங்கி விடலாம் எனவும் எனக்கு யாரோ ஒருவர் ONGC நிறுவனத்திலிருந்து தனிப்பட்ட முறையில் உதவி செய்து வருகிறார்கள் எனவும் சொன்னால் தவறு. எங்களுக்குள் ஏற்பட்ட ஒப்பந்தம் சட்டப்படி செல்லாது என்றால் தவறு. என்னுடைய பிராதில் 4 ம் பத்தியில் தனியாக தங்களுக்குள் கலந்து பேச வேண்டும் என்று கூறி என கண்டுள்ளது என்றால் சரி. 1, 5 பிரதிவாதிகள் எனக்கு கமிஷன் கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் தவறு. நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட சொத்துக்களுக்கு நஷ்ட ஈடு ONGC நிறுவனம் தரவேண்டியது அவர்கள் கடமை இருவருக்குமிடையே என்னுடைய பணி எதுவும் இல்லையென்றால் தவறு.

**குறுக்கு விசாரணை (2, 3, 6, 7, 10 பிரதிவாதிகள் தரப்பில்)**

நான் B.A. படித்துள்ளேன். என்னுடைய பிராதில் சமுதாய பணி செய்து வருவதாக சொல்வதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. என்னுடைய பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் பிரதிவாதிகள் 10 பேரும் இதில் சேராத வேறு நபர்கள் எனவும் வழக்கில் கண்ட நபர்களும் வழக்கில் காணாத சிலரும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. வழக்கில் உரிய தரப்பினர்கள் சேர்க்காத காரணத்தில்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.16 17:25:54 +0530

இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் தவறு. கண்ணன் என்பவர் பிரதிவாதியாக இல்லையென்றால் சரி. 27.11.2015 ல் கூட்டம் போட்டு அந்த கூட்டத்தில் முடிவெடுத்து அதன்படி எனக்கு 2½% கமிஷன் தொகை நிலத்திற்கு ONGC நிறுவனம் கொடுக்கும் தொகையிலிருந்து கொடுப்பது என முடிவு செய்ததாக நான் சொல்லியுள்ள விபரம் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. என்னுடைய வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் 27.11.2015 ல் நடந்ததாக சொல்லப்படும் கூட்டத்தில் பிரதிவாதிகள் எந்தவித கையொப்பமும் செய்யவில்லை எனவும் அதில் கலந்து கொள்ளவில்லை எனவும் சொன்னால் தவறு. பெத்தையன், ராஜசுலோசனா, கண்ணன், அய்யாபிள்ளை, சிவசக்திவேல் ஆகியோர் எவ்வளவு காலம் பழக்கம் என்றால் 15 ஆண்டு காலம் பழக்கம். அந்த பழக்கத்தின் அடிப்படையில் மேற்கண்ட நபர்கள் எல்லாம் கமிஷன் தொகை கொடுத்ததாக பொய்யாக சொல்லி வழக்கில் சாட்சியாக வேண்டும் என்ற முன் யோசனையின் பேரில் வழக்குரையில் குறிப்பிட்டு பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் தவறு. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் வழக்கு மூலம் என்ற பகுதி இல்லை என்றால் தவறு. கூட்டம் போட்டதாக நான் சொல்லும் தேதி 27.11.2015. தாவா வழக்கு 2020 ஜூன் மாதம் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் வழக்கு பரிகாரம் எனக்கு

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.16 17:25:58 +0530

கிடைக்க கூடியதல்ல எனவும் சொன்னால் தவறு. பிரதிவாதிகள் என்னை அதிகாரம் பெற்ற முகவராகவோ அதிகாரம் பெற்ற நபராகவோ ONGC நில ஆர்ஜிதம் செய்யும் நடவடிக்கைக்கும் இழப்பீடாக கிரய தொகை பெற்றதற்கும் எந்த காலத்திலும் என்னை நியமிக்கவில்லை என்றால் தவறு. பிரதிவாதிகள் அரசு சம்மந்தப்பட்ட அலுவலகங்களில் என்னை அதிகாரம் பெற்ற முகவராகவோ அதிகாரம் பெற்ற நபராகவோ இருக்க நியமிக்கவில்லை என்றால் தவறு. பிரதிவாதிகள் அவர்களுக்கு சொந்தமான நிலத்தை ONGC நிறுவனம் ஆர்ஜிதம் செய்ததற்கு இழப்பீட்டு தொகை பெற்றதற்கு நான் கமிஷன் கேட்டு தாக்கல் செய்துள்ள வழக்கு பொது கொள்கைக்கும் மற்றும் இந்திய ஒப்பந்த சட்ட விதிகளுக்கும் எதிரானது என்றால் தவறு. பிரதிவாதிகள் சார்பில் நான் முறையிட எந்தவித உரிமையும் கிடையாது என்றால் தவறு. பிரதிவாதிகளுக்கு எதிராக நான் கோரும் வழக்கு பரிகாரம் தனித்தனியாக தாக்கல் செய்ய வேண்டிய நிலையில் 10 பிரதிவாதிகளுக்கும் சேர்த்து ஒரே வழக்காக தாக்கல் செய்திருப்பது சட்ட பிழையுடையது என்றால் தவறு. எனக்கும் பிரதிவாதிகளுக்குமிடையே எந்தவிதமான வாய்மொழியோ எழுத்து மூலமான ஒப்பந்தமோ கிடையாது என்றால் தவறு. பிரதிவாதிகள் நில ஆர்ஜிதம் கிரய தொகை ONGC நிறுவனத்திலிருந்து வங்கி பரிமாற்றம் மூலம் நடைபெற்றது

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.16 17:26:02 +0530

என்றால் சரி. வா.சா.ஆ.1 பொது கொள்கைக்கு விரோதமானது என்பதால்தான் பிரதிவாதிகள் பதிலறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் தவறு. வா.சா.ஆ.9 முதல் வா.சா.ஆ.32 வரையான ஆவணங்கள் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் என்னால் உற்பத்திய செய்யப்பட்டவை என்றால் தவறு. வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.13, வா.சா.ஆ.15, வா.சா.ஆ.19, வா.சா.ஆ.21, வா.சா.ஆ.23, வா.சா.ஆ.25, வா.சா.ஆ.27, வா.சா.ஆ.29 ஆகியவற்றில் என் பெயர் செல்லபாண்டியன் என்று இல்லையென்றால் சரி. பாண்டியன் என்று மட்டும் உள்ளது. அதில் கண்டுள்ள பாண்டியன் நான்தான் என் பெயர் பாண்டியன் (எ) செல்லபாண்டியன் என்கிற விபரம் எதையும் என்னுடைய பிராதில் சொல்லவில்லை என்றால் சரி. மேற்படி ஆவணங்கள் இணைய தளத்தில் பெற்றுள்ளேன் என்றால் சரி. மேற்படி ஆவணங்களை கணினி மூலமாக யார் வேண்டுமானாலும் பெறலாம் என்றால் சரி. வா.சா.ஆ.32 ல் புகைப்படங்கள் என்னால் அறிவியல் நுட்பம் மூலமாக மேகிங் செய்யப்பட்டு வழக்கில் தாக்கல் செய்யப்பட்டள்ளது என்றால் தவறு. Electronic Evidence குறியீடு செய்ய சான்றுடன் தாக்கல் செய்யாததால் சட்டப்படி ஏற்றுக்கொள்ளகூடிய ஆவணம் இல்லையென்றால் தவறு. வா.சா.ஆ.31, 16.12.2020 அன்று இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் தவறு. ONGC நிறுவனம் நிலம் ஆர்ஜிதம் செய்த பின்னர்

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.16 17:26:10 +0530

இடத்தின் சட்டபூர்வ உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்கியதில் தனி நபரான நான் கமிஷன் கேட்பது சட்ட விரோதமானது மற்றும் பொது கொள்கைக்கு முரணானது என்றால் தவறு. நில ஆர்ஜித நடவடிக்கை, கிரய தொகை பரிமாற்றம் அனைத்தும் ONGC நிறுவனத்திற்கும் நிலத்தின் சட்ட பூர்வமான உரிமையாளரான பிரதிவாதிகளுக்குமிடையே நடைபெற்றது என்றால் சரி. என்னுடைய பிராதில் வழக்கு மூலம் இல்லையெனவும் காலவரை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாலும் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்க கூடியதல்ல என்றால் தவறு. நான் கோரியுள்ள பரிகாரம் இந்திய ஒப்பந்த சட்டத்திற்கு எதிரானது என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.16 17:26:15 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.